ஆண்டு பட்டிகை வழக்கு எண்.68/2026

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

C.C.No. 68/2026 LW- 3 PW- 2

Name : சுவிதா (கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : விஜயன்

Village : நத்தம் காவல் நிலையம்

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 35/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of June 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி நாச்சம்மாள் என்பவரை தெரியும். கடந்த 07.04.2026ம் தேதி காலை 9.00 மணிக்கு நான் நத்தம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.கார்த்திகேயன் அவர்களின் உத்தரவின்பேரில் பரளி, தேத்தாம்பட்டி, ரைஸ்மில் அருகே சென்றபோது அங்கிருந்த ஒரு பெண் எங்களைக் கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் நாச்சம்மாள், வயது 56, க/பெ.வில்லி, பரளி, தேத்தாம்பட்டி, நத்தம் என்று விலாசம் சொன்னார். மேலும் அவரிடமிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்குப் பையை பார்த்தபோது அதில் 180 ML அளவுள்ள பிளாக் பியர்ல் பிராந்தி 10 பாட்டில்களும், ஓரியன் பிராந்தி 16 பாட்டில்களும் இருந்தது. அதுகுறித்து அவரிடம் விசாரித்தபோது சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

2. பின்னர் ஆஜர் எதிரியை மதுபாட்டில்களுடன் காவல் நிலையம் கொண்டு வந்து ஆஜர்படுத்தி தலைமைக் காவலர் திரு.குணசேகரன் அவர்கள் தனிஅறிக்கை கொடுத்தார். மேலும் ஆஜர் எதிரி மீது ந.கா.நி.குற்ற எண்.209/2026, பிரிவு 4(1)(C) TNP Amendment Act–ன்படி சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4) அ.சா.1 மற்றும் காவலர் கண்ணன் சம்பவ இடம் சென்று பார்த்துவிட்டு அதன்பின்புதான் தகவல் சொல்லி சார்பு ஆய்வாளரின் உத்தரவின்படி சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். இந்த விபரங்களை சார்பு ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பரளி, தேத்தாம்பட்டி ரைஸ்மில் என்பது பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

4) எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படும் போது தனிநபர் யாரும் சாட்சியாக காட்டப்படவில்லை என்றால் சரிதான், தனிநபர் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. எதிரி எவ்வளவு ரூபாய்க்கு எந்த அரசு மதுபான கடையிலிருந்து வழக்கு சொத்தை வாங்கினார் என்பதையும், யாருக்கு எவ்வளவு லாபத்திற்கு விற்பனை செய்ய வைத்திருந்தார் என்ற விபரத்தையும், வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வெள்ளை நிற சாக்கு பை அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

5) நான் சொல்வது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.23 16:45:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம் ,